செ.வெ.எண்.100 நாள்.20.02.2018.

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில், தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனத்தின் மூலம், அறுவடைக்குப் பின் விவசாய பொருட்களை பராமரிப்பு தொடர்பான பயிற்சியை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்தார். மேலும், இப்பயிற்சியில் பங்கேற்ற 4 மாவட்டங்களைச் சார்ந்த 249 விவசாயிகளுக்கு விலையில்லா கைத் தொளிப்பான்களை வழங்கினார்.

--------

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில், தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனத்தின் மூலம், அறுவடைக்குப் பின் விவசாய பொருட்களை பராமரிப்பு தொடர்பான பயிற்சி இன்று (20.02.2018) நடைபெற்றது. இப்பயிற்சியில், திருநெல்வேலி, தூத்துக்குடி, கன்னியாகுமரி மற்றும் விருதுநகர் ஆகிய நான்கு மாவட்டங்களைச் சார்ந்த 249 விவசாயிகள் பங்கேற்றனர். இப்பயிற்சியினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் தொடங்கி வைத்தார். மேலும், இப்பயிற்சியில் பங்கேற்ற 4 மாவட்டங்களைச் சார்ந்த 249 விவசாயிகளுக்கு விலையில்லா கைத் தொளிப்பான்களை வழங்கினார்.

பின்னர், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் பேசியதாவது–

தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனத்தின் மூலம், நமது மாநிலம் முழுவதும் 57 இடங்களில் 7,21,000 டன் கொள்ளளவு கொண்ட கிடங்குகள் அமைக்கப்பட்டுள்ளது. விவசாயிகள் மற்றும் வியாபாரிகளுக்க அறிவியல் ரீதியான சேமிப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து சேமிப்பில் ஏற்படும் இழப்பினை குறைக்கும் வகையில் செயல்பட்டு வருகிறது. மேலும், விவசாயிகளுக்கு பல்வேறு திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது. விவசாய பொருட்களை சேமிப்பு கிடங்கில் வைத்துள்ள விவசாயிகள் வங்கிகளிடமிருந்து கடன் பெறுவதற்கு ஏதுவாக, மாற்றத்தக்க சேமிப்பு கிடங்கு ரசீதுகளை (Negotiable Warehouse Receipt) வழங்கி வருகிறது. இதன் மூலம் விவசாயிகள் தாங்கள் சேமிப்பு கிடங்குகளில் இருப்பு வைத்துள்ள விவசாய பொருட்களின் மதிப்பின் மீது, 7 சதவீதம் முதல் 10.05 சதவீதம் வட்டியில் 50 முதல் 70 சதவீதம் வரை கடன் பெறலாம்.

பல்வேறு அரசுத் துறைகளும், அரசு சார்பு நிறுவனங்களும், கூட்டுறவு வங்கிகளும் இந்நிறுவனத்தின் சேவைகளை பயன்படுத்தி வருகின்றனர். இங்கு வைக்கப்பட்டுள்ள பொருட்களை அறிவியல் ரீதியில் நவீன தொழில் நுட்பத்தினை பயன்படுத்தி, பூச்சி தடுப்பு மற்றும் நோய் தடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணியில், மிகுந்த அனுபவமும் பெற்றுள்ளது. இந்நிறுவனம், அறுவடைக்குப் பின் விவசாய பொருட்களை நோய் தாக்குதல் இன்றி, பராமரிப்பது குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளித்து வருகிறது. திருநெல்வேலி மாவட்டத்தில், உற்பத்தி முதல் விற்பனை செய்யும் வரை உதவி செய்தல் திட்டத்தில் நான்கு இடங்களில் ஒழுங்குமுறை விற்பனை கூடங்கள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும், தமிழக அரசு விவசாயிகளின் நலனிற்காக பலத் திட்டங்களை தீட்டி செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவனத்தின் இப்பயிற்சியில் எடுத்துரைக்கப்படும் கருத்துக்களை சிறப்பாக விவசாயிகள் செயல்படுத்துவதுடன், தங்களது அனுபவங்களை மற்ற விவசாயிகளுக்கும் எடுத்துக் கூறி விளைப்பொருட்களை பாதுகாக்க வேண்டுமென பேசினார்.

இக்கூட்டத்தில், தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவன திருநெல்வேலி மண்டல மேலாளர் திரு.அலாவுதீன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) திருமதி.சாந்திராணி, வேளாண்மை துணை இயக்குநர் (உழவர் பயிற்சி மையம்) திரு.பாலசுப்பிரமணி, தமிழ்நாடு சேமிப்பு கிடங்கு நிறுவன உதவி பொது மேலாளர் (ஓய்வு) திரு.எஸ்.ராமதாஸ், திருநெல்வேலி சேமிப்பு கிடங்கு மேலாளர் திரு.சுந்தரமகாலிங்கம் மற்றும் வேளாண்மைத் துறை தொடர்பான அலுலர்கள், திருநெல்வேலி, கன்னியாகுமரி, தூத்துக்குடி மற்றும் விருதுநகர் மாவட்ட விவசாயிகள், அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.